## குளியாப்பிடிய நகர சபை

## குருநாகல் மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 27 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்டம்பர் 30 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குளியாப்பிடிய நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசோட்டம் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அதிகாரப் பிரதேசம் தொடர்பாக புவியியல் ரீதியான தரவு முறைமையொன்று தயாரிப்பதற்காக மீளாய்வாண்டு ஆரம்பத்தில் கடன்கொடுத்தோரின் கீழ் ரூபா 83,175 இற்கான ஏற்பாடு ஒன்று காணப்பட்டதுடன், ஆண்டின் போது அதற்கான செலுத்த நேரிட்டுள்ள ரூபா 300,000 தொகையில் ஏற்பாடுகள் காணப்படாத ரூபா 216,825 தொகை முன்னைய ஆண்டிற்கான சீராக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல், மீளாய்வாண்டிற்கான உபசரிப்பு செலவுகளுக்கு ரூபா 165,290 உம் மற்றும் ஏனைய திணைக்கள செலவுகளுக்கும் ரூபா 51,535 உம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா 345,517 இற்கான நிர்மாண வேலை செலவுகள் கணக்கீடு செய்திருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான மூலதன செலவுகள் மற்றும் வருட இறுதியில் உள்ளவாறு கடன் கொடுத்தோர் ரூபா 345,517 இனால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு தொடர்பாக மூலதன உதவிகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 7,948,153 தொகையில் 2014 ஆண்டு தொடர்பாக ரூபா 2,669,440 தொகையும் அடங்கியிருப்பதால் ஆண்டிற்கான மூலதன வருமானம் மற்றும் வருட இறுதியில் உள்ளவாறு மூலதன உதவி கடன்பட்டோர் அதே பெறுமதியினால் மிகையாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நூலக புத்தகங்களின் மீதி ரூபா 312,629 குறைவாகவும் மற்றும் கையிருப்பு மீதி ரூபா 13,342,079 இனால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) முன்வரும் ஆண்டிற்காக மீளாய்வாண்டில் பெற்றிருந்த ரூபா 261,982 இற்கான வீதவரி வருமானம் வருமான கடன் கொடுத்தோர் முற்பெறுவனவு என கணக்கீடு செய்யப்படாமல் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வீதவரி வருமான கடன்பட்டோரின் குறைத்து காட்டப்பட்டிருந்தது.

(ஊ) கடை வாடகை என மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 632,500 இற்கான தொகை வருமானத்தின் கீழ் மற்றும் கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதே போல் 2014 ஆண்டு முதல் முன்னர் கிடைக்க வேண்டிய கடை வாடகை கடன்பட்டோர் ரூபா 880,000 தொகையினை கணக்கு குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,779,497 இற்கான நிலையான வைப்பு மற்றும் அதில் அடங்கியுள்ள ரூபா 198,390 இற்கான வட்டி வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை. வருட இறுதியில் காணப்பட்ட ரூபா 8,069,261 இற்கான நிலையான வைப்பு மற்றும் அதில் அடங்கியுள்ள ரூபா 994,499 இற்கான வட்டி வருமானம் இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா 26,728,039 இற்கான சம்பள செலவுகள் நிதிக் கூற்றுக்களில் ரூபா 27,301,154 தொகை என ரூபா 573,115 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு தொடர்பாக வீதவரி வருமானம் ஆகிய ரூபா 8,923,285 தொகையில் காணி துண்டுகள் அங்கீகரிப்பதற்காக பெற்றிருந்த நூற்றிற்கு 1 வரி ஆகிய ரூபா 455,000 உம் அடங்கியுள்ளது.

1.3.2 எதிர்பாராத பொறுப்புக்கள்

------------------------------------------

பிரதேச சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகை செலுத்த வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக சபையினால் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதி வரை அந் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 7,092,202 ஆக காணப்பட்டது. சபைக்கான மாதாந்த தவணைப் பணம் என ரூபா 21,451 வீதம் அந்நிதியத்திற்கு செலுத்தப்படும் பணம் சபையின் எந்த ஊழியர் தொடர்பானது என சபை அறிந்திருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீதியின் கீழ் 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் குறிப்பிட்ட பதிவேடுகளின் பிரகாரம் நேரொத்த பெறுமதி இடையே ரூபா 14,622,175 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 20,345,322 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 2,900,829 தொகையும் 1 – 3 வருடங்களிடையே காலத்தை சேர்ந்தவையே.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 50,354,354 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 9,034,034 தொகையும் 3 வருட காலத்தை மிகைத்தவையே.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 93,352,833 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விரிவான பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

2 நிதி செயலாற்றுகை

---------------------------------

2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,402,197 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 19,942,442 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 3,540,245 இற்கான வீழ்ச்சியொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 7,948,153 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 11,396,896 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 12,953,454 வரை குறைந்துள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம் ஆகிய ரூபா 90,967,289 இல் நூற்றிற்கு 45 ஆகிய ரூபா 41,366,352 உம் சபையின் உருவாக்கிய வருமானம் அல்லாத முத்திரைக் கட்டணம் சம்பள மீளளிப்புக்கள் ஆகிய படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ள மூலதன வருமானமாகிய ரூபா 7,948,153 இற்கான முழுத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காக கிடைத்த பணம் அடங்கியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 74,568,091 இல் நூற்றிற்கு 63 ஆகிய ரூபா 46,986,449 தனிப்பட்ட சம்பள செலவு ஆக காணப்பட்டதுடன், அவற்றில் நூற்றிற்கு 58 ஆக ரூபா 27,301,154 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைத்து வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

2.3 வருமான நிருவாகம்

---------------------------------

2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

-------------------------------------------------------------------

நகர சபை கட்டளை சட்டத்தின் பிரிவு 170 இன் பிரகாரம் வீதவரி மற்றும் ஏக்கர் வரி என்பன அவற்றிற்கான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளவாறு வெளிக்களத்தில் சேகரித்தல்

மேற்கொள்ள முடியும் அத்துடன் வியாபார அனுமதிப்பத்திரம், கடை வாடகை, குத்தகை, நீர்க் கட்டணம் போன்ற வருமானங்கள் வெளிக்களத்தில் சேகரிப்பதற்காக நகர சபை கட்டளை சட்டத்தின் பிரகாரம் கிடைத்துள்ள குறிப்பிட்ட அதிகாரம் அளித்தல் மேற்கொள்வதற்கு இயலுமான சந்தர்ப்பங்களை இனங்காண முடியவில்லை.

2.3.2 வீதவரி

-----------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 6,572,377 ஆக காணப்பட்டதுடன் அவை வருடாந்த பில் போடப்பட்டவைகளாகிய ரூபா 7,861,983 இல் நூற்றிற்கு 83 மாத்திரமே. சபையின் அதிகார பிரதேசத்தில் காணப்பட்ட வீதவரி அலகுகள் 4028 இல் 745 வீதவரி அலகுளுக்கு மாத்திரம் இறுதி அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது.

2.3.3 கடை வாடகை

------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 573,068 இற்கான கடை வாடகையை அறவீடு செய்வதற்காக சபையினால் முறையான நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை.

2.3.4 நீர்க் கட்டணம்

-----------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் மாதாந்தம் 25,000 நீர் அலகுகள் சுத்தம் செய்யப்பட்டு 1750 நீர் நுகர்வோருக்கு விநியோகிக்கப்பட்டிருந்த போதும், ஒவ்வொரு நுகர்வோரினாலும் நுகரப்பட்ட நீர் அலகுகளில் எண்ணிக்கை மற்றும் பொதுப் பாவணைக்கு எடுக்கப்பட்ட நீர் அலகுகளின் எண்ணிக்கை என்பவற்றை இனங்காண்பதற்காக முறையான நடைமுறை ஒன்று காணப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 2,671,805 ஆக காணப்பட்டதுடன் 2013 ஆண்டு ஜனவரி – ஜூலை வரை காலப்பகுதியில் எதுவித கட்டணமும் செலுத்தாத நீர் நுகர்வோர் எண்ணிக்கை 327 ஆகும். அதே போல் மாதாந்தம் ரூபா 100 வீதம் நிலையான கட்டணம் ஒன்றினை மாத்திரம் பில் போடப்படும் நீர் நுகர்வோர் எண்ணிக்கை 310 மற்றும் நீர் வழங்களின் தொடர்பினை அகற்றிய நீர் நுகர்வோர் 86 காணப்பட்டதுடன், குளியாப்பிடிய பொலிஸ் வீடுகள் தொடர்பாக நீண்ட காலமாக காணப்படும் நிலுவை மீதி ரூபா 91,690 ஆகும்.

2.3.5 கழியாட்டவரி

-------------------

சபையின் அதிகார பிரதேசத்தில் காணப்படும் இரண்டு சினிமா கொட்டகைகளில் இருந்து ரூபா 919,482 இற்கான கழியாட்டவரி நிலுவை ஒன்று காணப்பட்டது.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

--------------------------------------

மீளாய்வாண்டின் போது சபையினால் மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த ரூபா 1,300,000 பெறுமதியான 4 நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ திறமையின்மை

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் 2008 முதல் 2013 ஆண்டு வரையான காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த கட்டட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 196 ஆக காணப்பட்டதுடன் இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொண்டிருக்காத இடங்கள் 181 ஆகும். அதே போல் கட்டட அனுமதிப் பத்திரத்தை காலத்தை நீடிக்காமை தொடர்பாகவோ இணக்கச் சான்றிதழ் இன்றி அக்கட்டங்களை பயன்படுத்துவதற்கு எதிராக சபையினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. அத்துடன், இணக்கச் சான்றிதழ் கட்டணம் மற்றும் தாமதக் கட்டணம் அறவிடப்படல் தொடர்பாக ஏற்பாடுகள் சபையினால் ஆக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு எதிராகப் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு ஒன்று தொடர்பாக சபை முன் செல்லாமையால் வழக்கு ஒரு சாராருக்காக மாத்திரம் விசாரனை மேற்கொள்ளபப்பட்டு முறைப்பாட்டாளருக்கு ரூபா 500,000 சபையினால் செலுத்துமாறு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. சபையினாால் அதற்கு எதிராகவோ உயர்நீதிமன்றத்தில் முறையீடு ஒன்று சமர்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 55.800 சட்டத்தரணிக் கட்டணமொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சபையினால் மீகஹ கொடுவ பகுதியில் கழிவு நீர் இறங்கிச் செல்லும் வடிகால் ஒன்று நிர்மாணிப்பதற்கு எதிராக தனியான ஒருவர் 2006 ஆண்டின் போது தாக்கல் செய்திருந்த வழக்கொன்று மீளாய்வாண்டு இறுதி வரை விசாரணை செய்யப்பட்டு காணப்பட்டது.

(ஈ) சபைக்கு சொந்தமான சுபாரதிபுர நவ கம்கொட செயற்திட்டத்தின் காணி ஒன்று ரூபா 362,000 பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு பணம் முற்கொடுப்பனவு அடிப்படையில் வாடகைக்கு கொடுத்திருந்த போதும் கேள்விகளின் மூலம் குறிப்பிட்ட காணிகளை பெற்றிருந்த நபர்களின் பட்டியல், அறவிடப்பட்ட பணம் பற்றிய பதிவேடு, மேலும் அறவிடப்பட வேண்டிய தொகை மற்றும் குறிப்பிட்ட கோவை தொடர்பான தகவல்கள், காணி உறுதிகள் வழங்கப்பட்ட விபரம் என்பன சபையில் காணப்படுகின்றதென இனங்காண முடியாதிருந்தது. எனினும், இது தொடரபாக மீளாய்வாண்டின் போது ரூபா 226,845 தொகை ஒன்று அறவிடப்பட்டிருப்பதாக வருமானச் செலவுக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு